அந்தப் பகுதியில் இரயில் போக்குவரத்து இல்லை. மிகப்பெரிய அளவில் போக்குவரத்து நெருக்கடி இருப்பதால், அந்தப் பகுதியில் மேம்பாலம் ஒன்று அமைத்துக் கொடுத்தால், போக்குவரத்து நெருக்கடி குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதுகுறித்த ஆய்வு, நீண்டகாலமாக நிலுவையில் இருக்கிறது. அந்தப் பகுதியில் பாலம் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரயில்வே கடவின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இரயில்வே கடவு வழியே இரு பக்கமும் செல்கின்ற வாகனங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்குக் குறையாமல் இருந்தால்தான், அங்கு இரயில்வே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மத்திய அரசு இசைவு அளிக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஆய்வு செய்து, அந்த இரயில்வே கடவு வழியாக ஒரு இலட்சம் வாகனங்கள் செல்லுமானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, பாலம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 392, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

392—

தொழிற்பேட்டை

***29752—திரு. கடம்பூர் ராஜூ:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 11]

கோவில்பட்டி வட்டம், கடம்பூரில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோவில்பட்டி வட்டம், கடம்பூரில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும்கூட, அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், கோவில்பட்டி வட்டம், கடம்பூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ மூலமாக அரசு தேவையான நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைக்கும் தொண்டர்களுக்கு உயர்வைத் தந்த தாய், தவித்த வாய்க்குத் தண்ணீர் தந்த தாய், இருண்ட தமிழகத்திற்கு ஒளி தந்த தாய், (மேசையைத் தட்டும் ஒலி) கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவு தந்த கடவுளைப் போல, கருவுற்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அரிய உதவிகளைத் தந்த தாய், ஏழைப் பெண்கள் வாழ்வில் வளம்பெற, தாலிக்குத் தங்கம் தந்த தாய், விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு காவேரி, முல்லைப் பெரியாறை மீட்டு வாழ்வுரிமை பெற்றுத் தந்த தாய், மீனவர்களின் துயர் துடைக்க, கச்சத் தீவை மீட்டெடுக்க உரிமைக் குரல் தந்த தாய், கழகத்தை இமயமென நிலைநிறுத்தி, உழைப்பினால் வெற்றி கண்ட தாய், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடம்பூர் பேரூராட்சிப் பகுதியில் அரசுப் புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டால், அங்கே சிட்கோ மூலமாக தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்கள். அரசுப் புறம்போக்கு நிலம் இல்லாவிட்டாலும்கூட, தனியார், இடத்தைத் தருவதற்கு முன்வந்திருக்கின்றார்கள். எனவே, அதைப் பயன்படுத்தி, அங்கு கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு, தொழிற்பேட்டை

அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி வட்டம், கடம்பூர் கிராமத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவில், கோவில்பட்டியில் தொழிற்பேட்டை ஒன்று தொடங்கப்பட்டு, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, கடம்பூர் கிராமத்திலிருந்து 45 கி.மீ. தொலைவில், தூத்துக்குடியில் தொழிற்பேட்டை ஒன்று தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும், 85 கி.மீ. தொலைவில் பிடாநேரி என்ற கிராமத்தில் தொழிற்பேட்டை ஒன்று தொடங்கப்பட்டு சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தனியார் நிலம் தருவதற்கு முன்வந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டதற்கிணங்க, தொழிற்பேட்டை அமைக்கவும், சாலைகள், குடிநீர் வசதி, தெரு விளக்குகள், துணை மின் நிலையம் ஆகிய உட்கட்டமைப்புகளை ஏற்படுத்திடவும், திட்டத் தொகையில் 50 சதவிகிதம், அதிகபட்சமாக 10 கோடி ரூபாய் வரை மானியமாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வழங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கிடைக்கின்ற பட்சத்தில், அரசின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அத்தனைப் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 393, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.